செ.கு. எண்: 86 நாள்: 27/2/2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 27.2.2012

வேலூர் மாவட்டம், மேல்மொணவூர் கிராமம், கூட்ரோட்டில் 24.2.2012 அன்று அப்துல்லாபுரம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த அரசு பேருந்தின் மீது பின்னால் வந்த லாரி மோதியதில், பேருந்தில் ஏறிக்கொண்டிருந்த திருவண்ணாமலை மாவட்டம், அழகுசேனை கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பிரேமா என்பவர் பேருந்தின் சக்கரத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திருமதி. பிரேமா குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான பிரேமாவை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

1/1

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9